12th August 1963]

திரு. பி. முருகையன் : ஸார், இந்தக் கண்மாய் சுமார் 7 மைல் கரையுடையதாக இருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்ய மழை காலத்தில் போவதற்குக் கஷ்டப்படுகிருர்கள் ; தற்போது ஏரியின் நடுவில் ஒரு ரோடு இருக்கிறது. அதன் மீது ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவச்சலம் : இதுபற்றி மதிப்பிடப் பட்டது. இதற்கு 40,000 ரூபாய் ஆகிறது. வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரோக்ராமிலிருந்து 15,000 ரூபாய் வரையில் கொடுக்கலாம். அதற்கு மேல் கொடுக்கமுடியாது. பஞ்சாயத்தும், பொது மக்களும் உதவி அளிக்க முன் வந்தால் அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். பஞ்சாயத்தில் நிதி இல்லை என்று சொல்லி விட்டார் கள். அக்கரை உள்ள பொது மக்களும் நிதி வசூலிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

டாக்சிகள்.

** 107 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச் சிராப்பள்ளி முதலிய நகரங்களில் ஓடுகின்ற டாக்சிகளுக்கு மீட்டர் அமைக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதா ?

(இ) இல்லையென்ருல், இனிமேலாவது மீட்டர் வைக்கும்படி சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Under the Madras Motor Vehicles Rules, taxis plying in the mofussil should be fitted with either taxi-meters or mile-meters.

** 108 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா:—

(அ) தற்போது சென்னை நகரில் எத்தனை டாக்சிகள் உள்ளன?

(இ) இரவு 8 மணிக்கு மேல் டாக்சிகள் ஓடுவதற்கான வசதி செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M BHAKTAVATSALAM : (*a*) 1,607.

(*b*) There is no time restriction for plying taxis.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், சென்னை நகரில் போலீஸ் உபத்திரவத்தால் இரவு 9 மணிக்கு மேல் அதிகமாக டாக்ஸி ஓடுவது இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது கனம் அங்கத்தினர் கருத்தாக இருக்கலாம். போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும் அதை அவர்கள் உபத்திரவம் செய்கிருர்கள் என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எவ்வளவோ விபத்துக்கள் ஏற்படுகின்றன. டாக்ஸி டிரைவர்கள்

தவறுதலாக ஓட்டுகிறார்கள். போலீஸ் நடவடிக்கை மக்களை பாதிக்கிறது, அதனால் தான் இரவில் டாக்ஸிகள் ஓடமுடியவில்லை என்று சொல்லுவதையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகரில் அனுமதிக்கப் பட்டிருக்கிற டாக்ஸிகளின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது தேவைப்பட்ட அளவுக்கு அனுமதி வைக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உச்ச வரம்பு ஒன்றும் இல்லை. மேலும் கூட டாக்ஸிகள் அனுமதிக்க வேண்டும் என்பது அரசாங் கத்தின் கருத்து. அதிலும் ஃப்ளீட் சொந்தக்காரர்களுக்குக் கூட டாக்ஸி கொடுக்கலாம், அவர்கள் அதிகமாக வைத்துக் கொள்ள லாம், அதனால் நெருக்கடி அகற்றப்படும் என்று அவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. பொன்னுசாமி : டாக்ஸி ட்ரைவர்கள், அவர்களாக டாக்ஸி வாங்கிக் கொள்ள வசதியாக ஃபைனான்ஸின் கார்ப்பொ ரேஷன் கடன் உதவி செய்ய பணம் ஒதுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு ஃபைனான்ஸின் கார்ப் பொரேஷன் வேண்டுமென்பதல்ல. வேறு வகையில் ஏற்பாடு செய்து கொள்ளலாம். கூட்டுறவு ஸ்தாபனம் வைத்துக் கொள்ள லாம். ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் வைத்துக்கொண்டு டாக்ஸி வாங்கி ஓட்டலாம்.

திரு. எம். எஸ். மணி : சென்னை நகரில், இரவில் பொது மக்க களுக்கு வசதியாக இரவு நேரத்தில் ஓட்டுவதற்கு சில டாக்ஸி களுக்கு அரசாங்கம் லைசென்ஸ் வழங்கி இரவு நேரத்தில் மட்டும் ஓடக்கூடிய டாக்ஸிகளுக்கு வழிவகைச் செய்ய அரசாங்கம் ஏற் பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரவில் மட்டும் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வழங்கினால் அப்படி டாக்ஸிகளை ஓட்ட யாரும் முன் வர மாட்டார்கள். பகல், இரவு ஆகிய இரண்டு வேளைகளிலும் ஓட்டு வதற்குத் தான் லைசென்ஸ். இன்னும் லைசென்ஸ் கொஞ்சம் அதிக மாகக் கொடுத்தால் இரவு நேரங்களில் அதிகமாகக் கிடைக்கும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது ஓடிக் கொண்டிருக்கக் கூடிய டாக்ஸிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள திட்டம் ஏதாவது உண்டா? அந்த மாதிரி எடுத்துக் கொண்டு பொது மக்களுக்குச் சௌகரியம் செய்ய உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் உத்தேசம் இல்லை.

12th August 1963]

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இரவு 10 மணிக்கு மேல் ஓடக் கூடிய டாக்ஸியை அழைத்தால் அதிகமான கட்டணம் கொடுக்க வேண்டுமென்று டிரைவர்கள் கேட்கிறார்களே, அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாதிக்கப்பட்டவர்கள் போலீ ஸாரிடம் சொல்லி புகார் செய்தால் அதைப் பற்றி கவனம் செலுத்த லாம்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை நகரத்தில் இருக்கிற டாக்ஸி டிரைவர்கள் சங்கத்திலிருந்து கூட்டுறவு முறையில் டாக்ஸி கள் ஓட்டவேண்டுமென்று விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா? அது ஆலோசிக்கப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

திரு. வை. சங்கரன் : ஒரு சிலரிடத்தில் 10-12 டாக்ஸிகளுக்கு மேல் இருக்கின்றன. நிலத்திற்கு உச்ச வரம்பு வைத்திருப்பது போல ஒருவர் இவ்வளவு டாக்ஸிகள் தான் வைத்துக் கொள்ள லாம் என்று உச்ச வரம்பு வைக்க சர்க்கார் யோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது டாக்ஸி பற்றாக் குறை இருப்பதால் அவ்வாறு இன்று உச்ச வரம்பு வைக்க வேண் டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, டாக்ஸிகளில் இப்போது உட்கார அனுமதிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை மூன்று என்று இருக்கிறது. அந்த எண்ணிக்கையை நான்கு ஆக உயர்த்து வதற்கு அரசினருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு உத்தேசம் இல்லை.

சட்டசபை அங்கத்தினர்களுக்கு கார் விற்பனை

*109 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

எம்.எல்.ஏ.-க்களுக்கு, தங்கள் பணியைச் செவ்வனே செய் யும் வகையில் சிறிய கார்கள் (பியட், ஸ்டாண்டர்டு, அம்பாஸிடர்) விரைவில் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்து தரும் உத்தேச முண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no proposal.

திரு. இராம. அரங்கண்ணல் : பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அதோடு பக்கத் 9-00 a.m.